**தலைப்பு 320 - சிவில் பாதுகாப்புத் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூலை 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாண ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

**(அ) வருமானப் பெறுவனவு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| சிவில் பாதுகாப்புத் திணைக்களமானது அரசாங்க கட்டிடங்கள் மற்றும் வீடுகளின் குத்தகை வாடகை; விவசாயம், கால்நடைகள் மற்றும் ஏனையவை; இசை மற்றும் நடனம்; பாதுகாப்பு சேவைகள்; மற்றும் நிர்மாண மற்றும் பராமரிப்பு சேவைகள் ஆகியவற்றின் மூலம் கணிசமான வருமானத்தை சேகரிக்கிறது. மீளாய்வாண்டில் இவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 769.58 மில்லியன் தொகையாகும். வருடாந்தம் ஈட்டப்படும் குறித்த வருமானத்தை கணக்கீடு செய்வதற்காக தனியான வருமானத் தலைப்பை பேணுவதற்கு நிதிக் கொள்கை திணைக்களத்திடம் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களம் ஒரு தனியான வருமானத் தலைப்பை கோரியிருந்தது, மேலும் அது தொடர்பாக நினைவூட்டல்களும் அனுப்பப்பட்டுள்ளன. | திணைக்களத்திற்காக தனியான வருமானத் தலைப்பை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் காட்டப்பட்டுள்ள இறுதி மீதியின் பெறுமதி ஆண்டின் இறுதியளவில் ரூபா 914.14 மில்லியன் கூட்டுமொத்தமாகும். அந்தச் சொத்துக்கள் தொடர்பாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ஆண்டின் இறுதி மீதி ரூபா 112.1 மில்லியன் தொகையாக காணப்பட்டதால் ரூபா 802.04 மில்லியன் வேறுபாட்டை சுட்டிக்காட்டுகின்றது. | சிகாஸ் மென்பொருளின் நிலையான சொத்துகளின் பதிவேட்டில் உள்ள மீதியும் நிதிக்கூற்றுக்களில் உள்ள மீதியும் சமமாக காணப்படுகின்றது. | வேறுபாடுகளை இனங்கண்டு சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.3 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்கள உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்களுக்கு CC-10 பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை; பதிலாக, கடன் மீதிகள் மற்றும் அறவீடுகள் கணனியிலுள்ள spreadsheets இல் பேணப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டிலிருந்து CC-10 பதிவேடுகளைப் பயன்படுத்தி பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2017 யூலை 05 ஆம் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவின் பிரகாரம் கடன்கள் மற்றும் முற்பணங்களின் பதிவேடுகள் CC-10 படிவத்தில் பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் தொடர்பான 320-1-01-1102 செலவின விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.5 | உலகளாவிய தொற்றுநோய் பரவல் காரணமாக வெளிநாட்டு சுற்றுப்பயணங்கள் மட்டுப்படுத்தப்பட்டன, | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகளை முடிந்தவரை சரியாக தயாரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மில்லியன் நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. | இதனால் நிதியேற்பாடு சேமிக்கப்பட்டது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 05 மூலதன செலவின விடயங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 246.5 மில்லியன் மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 100.55 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்காத அதே நேரம் 17 மிண்டெழும் செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 6.89 பில்லியன் மெத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 1.41 பில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை . அந்த சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டில் 07 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன. | கொரோனா பரவலைத் தொடர்ந்து பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெறுவதற்கான கட்டளைகளை முறையாக மேற்கொள்ளத் தவறியமை மற்றும் டொலர் விகிதத்தின் தாக்கத்தால் வழங்குநர்கள் சோர்வடைந்தமை போன்ற காரணங்களால் அந்தச் சேமிப்புக்கள் ஏற்பட்டன. | -மேற்படி- |
| (இ) | 04 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் ஒரு மூலதன செலவின விடயத்தின் கீழ் மேலதிக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததால் ரூபா 106 மில்லியன் மற்றும் ரூபா 11 மில்லியன் தொகைகள் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் முறையே ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | தேசிய பாதீட்டுத் திணைக்களம் தேவைக்கேற்ப நிதியேற்பாடுகளை வழங்கியிருக்காததால், செலவினங்களை முகாமை செய்வதற்கு நிதியேற்பாடு மாற்றப்பட வேண்டியிருந்தது. | -மேற்படி- |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் மீண்டெழும் செலவின விடயம் ஒன்றிற்காகவும் மூலதன செலவின விடயம் ஒன்றிற்காகவும் மாற்றப்பட்ட முறையே ரூபா 04 மில்லியன் மற்றும் ரூபா 72 மில்லியன் தொகைகள் ஆண்டின் இறுதியளவில் முழுமையாகச் சேமிக்கப்பட்டிருந்தன. மேலும், நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் ஒரு மூலதன செலவின விடயம் உட்பட 03 செலவின விடயங்களுக்கு ரூபா 41 மில்லியன் கூட்டுமொத்தமான நிதியேற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் அந்த | கொரோனாவைத் தொடர்ந்து பொருட்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சிக்கல்கள், அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மூடப்பட்டமை, தபால் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் முடங்கியமை போன்ற காரணங்களால் அந்தச் சேமிப்புக்கள் ஏற்பட்டன. | -மேற்படி- |

நிதியேற்பாட்டில் 32 சதவீதத்திற்கு சமமான ரூபா 13 மில்லியன் கூட்டுமொத்த தொகை ஆண்டின் இறுதியளவில் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 140.16 மில்லியன் பெறுமதியான பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் இறுதியளவில் காணப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதியில் குறித்த தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக்களின் சரியான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் 15 செலவின விடயங்களிற்குரிய ரூபா 142.69 பில்லியன் பெறுமதியான பொறுப்புக்களை திணைக்களம் 2022 மார்ச் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்ய தவறியிருந்தது. | கொரோனா பரவல் காரணமாக உரிய காலத்தில் விலைப்பட்டியல்களை சமர்ப்பிக்கத் தவறிய வழங்குநர்கள் இந்த நிலைமைக்கு பங்களித்திருந்தனர். | பொறுப்புக்களை உடனடியாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணங்கள் 94(1) மற்றும் 214 ஆகியவை புறக்கணிக்கப்பட்டதால், ஒரு மாதத்திற்கு மேல் 51 பொறுப்பு உருப்படிகள் காணப்பட்டதுடன் அவற்றின் பெறுமதி 2.1 மில்லியனாகும். | -மேற்படி- | -மேற்படி- |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப்பிரமாண | திணைக்களத்தின் | சுட்டிக்காட்டப்பட்டவற்றிற் | தொடர்புடைய |

| | | | | |
|---|---|---|---|---|
| | ம் 104(3), (4). | வாகனம் ஒன்றிற்கு ஏற்பட்ட விபத்து தொடர்பில் பூர்வாங்க அல்லது விரிவான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிக்கவில்லை. | கு இணங்க உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் பின்பற்றப்பட வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 06 மாத காலத்திற்கு மேலாக காசாக்கப்படாதிருந்த ரூபா 569,311 பெறுமதியான 39 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த காசோலைகள் தீர்க்கப்படும் என வழங்குநர்களிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (iii) | நிதிப்பிரமாணம் 770(4), 770(அ),(ஆ) | 2020 ஆம் ஆண்டுக்கு முன்னர் சாதாரண பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட வாகனங்கள் உட்பட முன்னைய ஆண்டுகளில் சாதாரண பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட 25 வாகனங்கள் காணப்பட்டன. மேலும், மீளாய்வாண்டில் சாதாரண பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட வாகனம் இயங்கும் நிலையில் காணப்படவில்லை என தீர்மானிக்கப்பட்டது, ஆனால் அந்த வாகனங்களை அகற்றுவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் கிடைத்தவுடன் தொடர்புடைய பிரமாணங்கள் பின்பற்றப்படும். | -மேற்படி- |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891. | பிணைகளை வழங்க வேண்டிய 06 நிர்வாக பதவிகள் மற்றும் 03 இரண்டாம் நிலை பதவிகளின் உத்தியோகத்தர்கள் அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | அந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணைகளைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (v) | நிதிப்பிரமாணம் 1645 (அ) | திணைக்களத்தின் 17 வாகனங்கள் தொடர்பான சம்பவக்குறிப்பு புத்தகங்கள் (log books) பேணப்பட்டிருந்த | பதிவு புத்தகங்களை நாளதுவரையாக்குவதற்கு போக்குவரத்து பிரிவுகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், அத்தியாவசிய விபரங்கள் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | நிதிப்பிரமாணம் 1647 (உ) | திணைக்களத்தால் பேணப்படும் வாகனங்களின் பதிவேட்டில் ஒவ்வொரு வாகனமும் விடுவிக்கப்பட்ட அல்லது திரும்பும் திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்களின் பதிவேடுகளில் தேவையான தகவல்களை உள்ளடக்கி நாளதுவரையாக்குவதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் திணைக்களத்தால் பயன்படுத்தப்படும் 426 வாகனங்கள் மற்றும் 205 மோட்டார் சைக்கிள்கள் தொடர்பாக எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போதைய எரிபொருள் நெருக்கடியை கருத்தில் கொண்டு அந்த சோதனைகள் தாமதமாகியுள்ளன. | -மேற்படி- |

## 2.4 முற்பணத்தை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட 220 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 13.17 மில்லியன் கூட்டுமொத்தமான இடர் கடன்கள் மற்றும் விழா மற்றும் விசேட முற்பண மீதிகளில் 03 ஆண்டுகளிற்கு மேலாக பெறப்பட வேண்டியிருந்த மீதிகளின் பெறுமதி ரூபா 9.4 மில்லியன் கூட்டுமொத்தமாகும். மேலும், மீளாய்வாண்டில் பதவி வறிதாக்கப்பட்ட 75 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 3.25 மில்லியன் தொகையான விழா, இடர் மற்றும் விசேட முற்பண மீதியும் | அந்த கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு சபையொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சபை அறிக்கையின் பிரகாரம் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.3 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அந்தக் கடன் மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். பெறவேண்டிய கடன் மீதிகள் கணக்குகளில் சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. அந்த மீதிகளின் அறவீடு மோசமாக இருந்தது. மீளாய்வாண்டில் பதவி வறிதாக்கப்பட்ட 04 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 605,466 கூட்டுமொத்தமான அறவிடப்பட வேண்டிய இடர் கடன் மீதி இன்னும் சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியதாக கணக்குகளில் காட்டப்பட்ட அதேநேரம் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 133,550 கடன் மீதி கணக்குகளில் விடுபட்டிருந்தது. | | வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 12 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடம் இருந்தும் 19 இறந்த உத்தியோகத்தர்களிடம் இருந்தும் பெறப்பட வேண்டிய முறையே ரூபா 2.03 மில்லியன் மற்றும் ரூபா 2.57 மில்லியன் இடர்கடன் மீதிகள் கணக்குகளில் விடுபட்டுள்ளது. அந்தக் கடன் மீதிகள் தொடர்பான வயதுப் பகுப்பாய்வை வழங்குவதற்கோ அல்லது அவற்றை அறவீடு செய்வதற்கோ திணைக்களம் தவறியிருந்தது. மேலும், 37 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிற்குரிய ரூபா 516,260 கூட்டுமொத்தமான இடர் கடன்கள், விழா மற்றும் விசேட முற்பண மீதிகள் ஒரு வருடத்திற்கும் குறைவானதாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ள போதிலும் அக் கடன் மீதிகள் ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்து காணப்பட்டன. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அவர்களது ஓய்வூதியத்தில் இருந்து அறவீடு செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கணக்கிற்கு கொண்டுவரப்படாத கடன் மீதிகள் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டு வயது பகுப்பாய்வுகளை சரியாக தயாரிப்பதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2 மற்றும் 4.4 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அந்தக் கடன் மீதிகள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். பெறவேண்டிய கடன் மீதிகள் தொடர்பாக சரியான வயது பகுப்பாய்வுகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை சேவையில் இருந்த 322 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்த ரூபா 10.94 மில்லியன் கூட்டுமொத்தமான இடர் கடன்கள் மற்றும் விழா மற்றும் விசேட முற்பண மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதிகள் தாமதமின்றி அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 2.5 வங்கி கணக்குகளின் செயற்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தால் பேணப்படும் வங்கி நடைமுறைக் கணக்கில் | இந்த மீதியை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி இனங்காணப்பட்ட பின்னர் கடன் |

| | | |
|---|---|---|
| காணப்பட்ட ரூபா 23.79 மில்லியன் பெறுமதியான இனங்காணப்படாத பெறுவனவு மீதி இனங்காணப்பட்ட பின்னர் கணக்குகளுக்கு சரியாகக் கொண்டுவரப்படுவதற்குப் பதிலாக வைப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | | மீதிகளை முறையாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு அல்லது அதற்கு முன்னைய ஆண்டுகளில் பதவி வறிதாக்கப்பட்ட, ஓய்வு பெற்ற அல்லது இறந்த 442 உத்தியோகத்தர்கள் திணைக்களத்தில் பணியாற்றிய பின்னர், அவர்கள் இன்னும் சேவையில் இருப்பதாகக் கருதப்பட்டு ரூபா 10.08 மில்லியன் சம்பளம் செலுத்தப்பட்டது. அக் கொடுப்பனவுகளில் ரூபா 2.36 மில்லியன் தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகமாக செலுத்தப்பட்ட சம்பளத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் அதே நேரம் சம்பளம் வழங்குவது தொடர்பாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட வேண்டும். |

## 2.7 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வு தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட மோசடித்தன்மையான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் கதிர்காம அலுவலகத்தில் 16 அடி அகலம் கொண்ட 903 அடி நீளத்தில் உள்ள உள்ளக வீதிகளை மேம்படுத்தி, கொங்கிரீட் அமைப்பதற்காக அப்பகுதியில் உள்ள தனியார் வழங்குநர் ஒருவரிடமிருந்து, சீமெந்து, கல் மற்றும் மணல் போன்ற கட்டிட மூலப் பொருள்களை கொள்வனவு செய்தமைக்காக விலைப்பட்டியல் ஒன்றின் சார்பாக ரூபா 584,200 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், கதிர்காமம் அலுவலகத்திற்கு இதுவரை கட்டிட மூலப்பொருட்கள் கிடைத்திருக்காததுடன் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது, விசாரணை முடிந்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுகை நடவடிக்கைகள் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் தொடர்பான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்பட வேண்டும். மோசடியான கொடுக்கல் வாங்கல்களிற்கு பொறுப்பான தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், அதன் மூலம் நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுபேறு (Outcome) அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்னாரிலுள்ள கொண்டச்சியில் 27,000 முந்திரிகை மரங்களை உள்ளடக்கிய 1,200 ஏக்கர் நிலப்பரப்பில் முந்திரிகை பயிரிடல் செயற்திட்டத்தை திணைக்களம் பேணி வருகிறது. முன்னைய 05 ஆண்டுகளுக்கான வருமானம் மற்றும் செலவினங்களை ஒப்பிடும் போது செலவினம் வருமானத்தை ரூபா 10.6 மில்லியனால் விஞ்சியிருந்தது. இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ள 180 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் சம்பளத்திற்கான செலவினங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டால் நட்டம் மேலும் அதிகரிக்கும் என அவதானிக்கப்பட்டது. காட்டு யானைகளிடமிருந்து பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்காக 120 சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், மேலும் 14,700 முந்திரிகை மரங்கள் மாத்திரமே எண்ணப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், அறுவடை மற்றும் பதிவு செய்யும் செயன்முறை முறையான மேற்பார்வையின்றி மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடையை களஞ்சியப்படுத்துவதற்கு போதுமான களஞ்சியப்படுத்தல் வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பயிர்ச்செய்கையை சுற்றிலும் மின்வேலியை அமைப்பதற்கும், முந்திரிகை மரங்களுக்கு இலக்கமிடுவதற்கும், அறுவடை செயன்முறையை முறையாக மேற்பார்வை செய்வதற்கும், போதிய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பயிரிடுதல், அறுவடை செய்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் செயன்முறையை முறையாக முகாமை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், இதன் மூலம் விளைவை அடைந்து செலவினங்களைக் குறைக்க வேண்டும். |

### 3.2 வெளியீடு அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 350 அரசாங்க நிறுவனங்களுக்கு பாதுகாப்பை வழங்குவதற்கு பட்டியலிடப்பட்டது, ஆனால் 99 நிறுவனங்களுக்கு மாத்திரமே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதால் இது 28 சதவீத பௌதீக செயன்முன்னேற்றத்தைக் குறிக்கிறது. மேலும், தொல்பொருள் | 2021 ஆம் ஆண்டில் 101 நிறுவனங்களுடன் தொடர்புடைய 617 இடங்களில் உத்தியோகத்தர்களை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இலக்குகள் அளவு ரீதியாக குறிப்பிடப்பட வேண்டும். இலக்குகளை நிறைவேற்றுவதற்கு |

| | | |
|---|---|---|
| இடங்களைப் பாதுகாத்தல், டெங்குவைத் தடுத்தல், கொரோனாவைக் கட்டுப்படுத்துதல், காவல்துறைக்கு உதவுதல் மற்றும் நகரங்களை அழகுபடுத்துதல் தொடர்பான செயற்திட்டங்களின் இலக்குகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இடங்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் Vistas of Prosperity கருத்திற்கு ஏற்ப விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்கத்துடன், நிர்மாண மூலப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 17.67 மில்லியன் தொகை உள்ளடங்கலாக ரூபா 18.37 மில்லியன் தொகை திணைக்களத்தின் கெபிட்டிகொல்லாவிலுள்ள மாகாண அலுவலகத்தினால் பராமரிக்கப்படும் 20 ஏக்கர் காணியில் மிளகாய் பயிர்ச்செய்கைக்காக பசுமை வீடு ஒன்றை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தது. அந்தச் செலவினங்கள் முறையான சாத்தியவள ஆய்வின்றி மேற்கொள்ளப்பட்டதால் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியாமல் தோல்வியடைந்திருந்தது. | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. 20 ஏக்கர் திட்டத்தை புறக்கணித்து, ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை பயன்படுத்தி 20 ஏக்கர் பரப்பளவில் ஆரம்ப செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படும். எதிர்காலத்தில் இதுபோன்ற செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படும் போது முறையாக திட்டமிடப்பட்ட பின்னரே சாத்தியவள ஆய்வுகள் நடாத்தப்படும். | முறையான சாத்தியவள ஆய்வை மேற்கொண்ட பின்னரே செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள்ளத் தவறிய செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அனைத்து மாவட்டங்களிலும் சிவில் பாதுகாப்பு பணியாளர்களைப் பயன்படுத்தி திணைக்களத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களை கருத்திற்கொண்டு, | பல தோல்வியுற்ற செயற்திட்டங்கள் தற்போது கைவிடப்பட்டுள்ளதுடன் அதிக உற்பத்திதிறன் | செயற்திட்டங்களின் கிரய செயற்திறன் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கதிர்காமம், மொனராகலை, அம்பாறை, உஹன மற்றும் மஹாஓயா ஆகிய மாகாண அலுவலகங்களினால் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக விளக்குமாறுகள், கழுகுகள், பூச்சாடிகள், செங்கல்கள், புதிய பால், செய்தித்தாள் அட்டைகள், தையல், துடைப்பங்கள், அலங்கார மீன், மண் பானைகள், இனிப்புக்கள் மற்றும் புகைப்பிடித்த மீன் போன்ற பொருட்களை உள்ளடக்கி கணக்காய்வு சோதனைகள் நடாத்தப்பட்டன. இக் காலப்பகுதியின் போது செலவினங்களை விஞ்சி ரூபா 08 மில்லியன் வருமானம் அந்த செயற்திட்டங்களால் ஈட்டப்பட்டுள்ளது. எனினும், பணியாளர்களின் சம்பளத்திற்கான கிரயத்தைக் கருத்தில் கொண்டால், வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 76.5 மில்லியன் கூட்டுமொத்தமாகும். அந்த செயற்திட்டங்களுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விலைப்பட்டியல்கள்/ பதிவேடுகள் மற்றும் தொடர்புடைய தயாரிப்புக்களின் விற்பனை தொடர்பான வருமான பதிவேடுகள் கிடைக்காததால், உண்மையான உற்பத்தி செயன்முறை இடம்பெற்றதா அல்லது செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. மேலும், சம்பளத்திற்கான கிரயத்தைக் கருத்தில் கொள்ளும் போது பல செயற்திட்டங்கள் கிரய செயற்திறன் கொண்டவையாக காணப்படவில்லை, ஆனால் உற்பத்தித்திறனுடன் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதில் உயர்மட்ட முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கொண்ட செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள் என. | எதிர்பார்த்த விளைவை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 பெறுகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வருட காலத்திற்கு பெறுகைத் திட்டமொன்று | தற்போதிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு | பெறுகை வழிகாட்டல்களின் |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. ரூபா 167 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்படும் பொருள் அலகுகளின் எண்ணிக்கை மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஒருமுறை பெறுகைத் திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். செலவினத் தலைப்புக்கள் அனைத்திற்கும் உரிய பொருட்கள் மற்றும் உபகரணங்களைத் தனித்தனியாகக் காண்பிப்பது நடைமுறையில் சாத்தியமில்லாதுள்ளது. | பிரகாரம் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடை முறை/ தேசிய போட்டி கேள்வியை பின்பற்றி மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 65 மில்லியன் பெறுமதியான பெறுகைகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் பொதுவாக இனங்காணப்பட்டன. | | |
| (i) | 200 இற்கும் மேற்பட்ட நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்தன, ஆனால் பெறப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை 10 இற்கும் குறைவாகவே காணப்பட்டது. கேள்வி ஆவணங்கள் கேள்விதாரர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பதற்கு கணக்காய்விற்கு மின்னஞ்சல்கள் அல்லது அஞ்சல் ரசீதுகள் கிடைத்திருக்கவில்லை. | தற்போது, பாதுகாப்பு அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள், அதே நேரம் வழங்குநர்கள் வானவில் பக்கங்களைப் பயன்படுத்தியும் தெரிவு செய்யப்படுகிறார்கள். மின்னஞ்சல்களை உரிய கோவைகளில் உள்ளடக்குவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கேள்விகளைக் கோருவதற்கு மாற்று முறைகளை ஆராய வேண்டும். கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | கேள்விகள் பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அல்லது கேள்விப் பெட்டி மூலம் பெறப்பட்டிருந்ததா என்பது கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பதிவு செய்யப்பட்ட தபால் மூலமாகவோ அல்லது கேள்விப் பெட்டி மூலமாகவோ பெறப்பட்ட கேள்விகள் தொடர்பாக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | அந்த பதிவேடுகளை பேணுவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (iii) | சில கொள்வனவுகளைப் பொறுத்தவரை, ஒவ்வொரு விநியோக வகையின் கீழும் அதிக எண்ணிக்கையிலான வழங்குநர்கள் பதிவு | அத்தகைய தகவல்கள் காலக்கிரமத்தில் வழங்கப்படும். | கேள்விதாரர்களை தெரிவுசெய்வதில் பின்பற்றப்பட்ட அடிப்படை கணக்காய்விற்கு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டுள்ளனர். ஆனால் மிகக் குறைந்த எண்ணிக்கையிலான வழங்குநர்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டிருந்தது, மேலும் அவர்கள் எந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்பது கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (iv) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்களை புறக்கணித்து சில கொள்வனவுகளுக்கு வரையறுக்கப்பட்ட/ தேசிய போட்டி கேள்வி முறை பின்பற்றப்பட்டுள்ளது. | அந்த பரிந்துரைகளுடன் இணங்கப்படுகிறது. பெறுகை வழிகாட்டல்கள் காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் மிகவும் பொருத்தமான பெறுகை முறை தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (v) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் மற்றும் கேள்வி திறத்தல் குழுக்களின் நியமனம் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | அந்த ஆவணங்களை காலக்கிரமத்தில் கோவையிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (vi) | நானாவித பொருட்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக ஒரே குழு உத்தியோகத்தர்களைக் கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. | தொழில்சார் நிபுணத்துவம் கொண்ட உத்தியோகத்தர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கிடைப்பதால் அந்த உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அக் குழுக்களுக்கு அடிக்கடி நியமிக்கப்படுகிறார்கள். | பெறுகை வழிகாட்டல் 2.8.1(ஆ) இன் பிரகாரம் விடய நிபுணர்/களையும் பெறுகை நடைமுறைகளில் போதுமானளவு அறிவு பெற்ற ஆகக்குறைந்தது ஒரு உறுப்பினரையும் TECs கொண்டிருத்தல் வேண்டும். |
| (vii) | பெறுகை வழிகாட்டல் 6.3.3 (ஆ) இற்கு முரணாக கலந்துகொள்ள விரும்பும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் கேள்வி திறக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த பரிந்துரைகளுடன் இணங்கப்படுகின்றது. பெறுகை வழிகாட்டல்கள் காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(இ) ஒவ்வொரு பெறுகை தொடர்பாகவும் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| (i) | 11 கோவைகளின் கீழ் ரூபா 17.67 மில்லியன் தொகை செலவிடப்பட்டு பசுமை இல்லம் ஒன்றில் மிளகாய் பயிரிடுதல் செயற்திட்டத்திற்காக பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பெறுகையின் போது கேள்விகளை திறத்தல், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைகளை வழங்குதல், பெறுகைக் குழுவின் தீர்மானங்களை வழங்குதல் மற்றும் பொருட்களை கட்டளையிடுதல் போன்ற பெறுகை நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் பொருட்கள் களஞ்சியங்களால் பெறப்பட்டிருந்தன. கொள்வனவை மேற்கொண்ட பின்னர் கணக்காய்வை தவறாக வழிநடாத்தும் வகையில் சட்டப்பூர்வத்தன்மையை சரிபார்ப்பதற்கு போலியான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டிருந்தன. பெறுகைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டிருந்ததால், ரூபா 3.23 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவை மேற்கொண்டு 04 கோவைகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பயன்படுத்தப்படாமலேயே ஓராண்டு காலப்பகுதிக்கு மேலாக களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்தது. இதனால் மின்சாரப் பொருட்களின் ஒரு வருட உத்தரவாதக் காலப்பகுதி பயன்படுத்தப்படாமல் காலாவதியாகியிருந்தது. கடை முறையின் கீழ் பெறப்பட வேண்டிய ஆகக்குறைந்த கேள்விகளின் எண்ணிக்கை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில் லை. அந்த பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கையிருப்பின் கீழ் ரூபா 2.78 மில்லியன் தொகையில் 02 Rotavators ஐ கொள்வனவு செய்த போது ஒரு உறுப்பினரால் கேள்வி | குறித்த செயற்திட்டத்தை துரிதமாக நடைமுறைப்படுத்துமாறு கௌரவ சனாதிபதியினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்ததால் உத்தியோகத்தர்கள் அதற்கிணங்க செயற்பட்டுள்ளனர். இந்த நடைமுறை சரியானது அல்ல என்பது ஏற்றுக் கொள்ளப்படுகிறது, மேலும் இது போன்ற நிலைமை காலக்கிரமத்தில் இடம்பெறுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. கொரோனா பரவல் காரணமாக பல வணிக வளாகங்கள் திறக்கப்பட்டிருக்கவில்லை , ஆகையால் சந்தை விலைகளை கள ஆய்வு மூலம் பரீட்சித்து குறைந்த விலைக்கு வழங்கிய வழங்குநர்களிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்தனர். அதன் பின்னர் பெறுகை நடைமுறைக்காக ஆவணங்கள் பெறுகை பிரிவுக்கு அனுப்பப்பட்டன. | அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் பெறுகைகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

திறக்கப்பட்டிருந்ததுடன் விபரக்குறிப்புரைகளுக்கு இணங்க குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டது, அதன் மூலம் ரூபா 1.98 மில்லியன் அதிக கேள்விப் பெறுமதியின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 05 மில்லியன் தொகை செலவிடப்பட்டு Insect Proof வலைகளை கொள்வனவு செய்த போது தாய்வான் மற்றும் இஸ்ரேலில் இருந்து விபரக்குறிப்புரைகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த ஆகக்குறைந்த கேள்விகளுடன் இரண்டு உற்பத்திப்பொருட்கள் நியாயப்படுத்தப்படாமல் நிராகரிக்கப்பட்டு அதிக கேள்வியின் கீழ் பெறுகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 3.75 மில்லியன் செலவில் கட்டிட மூலப்பொருட்கள் மற்றும் தெளிப்பு இயந்திரங்களை கொள்வனவு செய்த போது ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 9.83 மில்லியன் செலவில் 13,000 கிலோகிராம் கறுப்பு பொலித்தீனை கொள்வனவு செய்த போது பெறுகை வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கேள்விகள் பெறப்பட்டிருக்கவில்லை. அல்லது வழிகாட்டல் 5.6 இற்கு முரணாக விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தர உறுதிப்பாட்டு அறிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் தரம் உயர்வாக உள்ளதென பரிந்துரை வழங்கப்பட்டு, அதிக கேள்வி பெறுமதியில் வழங்குநர் ஒருவரிடமிருந்து ரூபா 4.12 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவை மேற்கொண்டு பொலித்தீன் கையிருப்பு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. பொலித்தீன் கொள்வனவு செய்யப்பட்டு 05 மாதங்களுக்கும் மேலான காலம் கடந்துள்ள | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக வழங்குநர் நிறுவனங்கள் மூடப்பட்டிருந்தன. திறந்திருந்த நிறுவனங்கள் பொருட்களை தயாரிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டன. ஆகையால் பெறப்பட்ட விலைமனுக்களை கருத்தில் கொண்டு கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. விவசாய ஆலோசகர் வழங்கிய தரச் சான்றிதழ் விபரக்குறிப்புரையாகப் பயன்படுத்தப்பட்டது. நாட்டில் நிலவும் நெருக்கடியை தொடர்ந்து போக்குவரத்து வசதிகள் இல்லாததால் விநியோகத்தில் தாமதம் ஏற்பட்டது. | அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் பெறுகைகளை மேற்கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். தேவைப்பாட்டைக் கண்டறிந்து கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 99 சதவீதமான கையிருப்பு அல்லது ரூபா 09 மில்லியன் பெறுமதியான 12,862 கிலோகிராம் பொலித்தீன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | ரூபா 9.38 மில்லியன் தொகையை செலவிட்டு 408 ரயர்கள், 345 ரியூப்கள் மற்றும் 187 கொலர்களை (collars) கொள்வனவு செய்ததற்கான விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் கேள்வி ஆவணங்கள் வழிகாட்டல் 5.3.1 (ஈ) இன் பிரகாரம் சரிபார்க்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கேள்விதாரர்களின் முன் அனுபவத்தை பரீட்சிப்பதற்கான ஆவணங்கள் கோரப்பட்டிருக்காததுடன் பெறுகை வழிகாட்டல் 7.7 (ஆ) இற்கு முரணாக கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்படாத அளவுகோல்கள் கேள்விகளை மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதனால் வழங்குநர் பக்கச்சார்புடன் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். மொத்த சரக்கிருப்பும் ஒரே வழங்குநரிடமிருந்து கொள்வனவு செய்யப்படாமல் குறைந்த அலகு விலைகளை சமர்ப்பித்திருந்த வழங்குநர்களிடமிருந்து கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தால் ரூபா 632,378 தொகை அரசாங்கத்தால் சேமிக்கப்பட்டிருக்கும். | எதிர்கால பெறுகையின் போது கேள்வி ஆவணங்களுக்கு அங்கீகாரம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பொருட்களை வழங்குநரிடமிருந்து குறைந்த வழங்கல் காலப்பகுதியுடன் கொள்வனவு செய்ய வேண்டும் என்று பரிந்துரைகளை வழங்கியிருந்தது. கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக சந்தையில் ரயர்கள் தட்டுப்பாடு காரணமாக, பல வழங்குநர்களிடமிருந்தும் அந்தப் பொருட்களைப் பெற முடியவில்லை. ஆகையால் அதே நிறுவனத்திற்கு கட்டளைகள் வழங்கப்பட்டன. | பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி, பெறுகை நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு சாதகமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iv) | ரூபா 9.54 மில்லியன் செலவில் எல்.ஈ.டி விளக்குகளை கொள்வனவிற்காக பெறுகை வழிகாட்டல்கள் 2.14.1 இற்கு முரணாக குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கேள்விகள் பெறப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டல் 7.7 (ஆ) ஐப் புறக்கணித்ததால், கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்படாத அளவுகோல்கள் கேள்விகளை மதிப்பிடுவதற்குப் | கொவிட்-19 தொற்றுநோய் காரணமாக பல வழங்குநர்கள் மூடியிருந்ததுடன் மூன்று வழங்குநர்கள் மாத்திரமே கேள்விகளை சமர்ப்பித்திருந்தனர். வழிகாட்டல் 7.7(ஆ) காலக்கிரமத்தில் பின்பற்றப்படும். | பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி பெறுகை நடவடிக்கைகள் அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்தப்பட்டன, இதனால் வழங்குநர் பக்கச்சார்பான முறையில் தொரிவுசெய்யப்பட்டார். ஆகையால் ரூபா 3.09 மில்லியன் மேலதிகக் கொடுப்பனவில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | | |
| (v) | ரூபா 6.6 மில்லியன் தொகை செலவிட்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கு 3999 சேலைகளை கொள்வனவு செய்த போது பெறுகை வழிகாட்டல் 2.14.1 இற்கு முரணாக குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கேள்விகள் பெறப்பட்டிருக்கவில்லை. அந்த சேலைகள் 06 மாத உத்தரவாத காலப்பகுதியை கொண்டிருந்தன, ஆனால் கணக்காய்வால் பரீட்சிக்கப்பட்ட சமயத்தில் களஞ்சியங்களில் 07 மாதங்களுக்கு முன்னர் பெறப்பட்டிருந்த ரூபா 1.3 மில்லியன் ரூபா பெறுமதியான 854 சேலைகள் இருந்தன. உத்தரவாதக் காலம் முடிவடைந்து ஒரு மாதமாகியும் அந்த சேலைகள் விநியோகிக்கப்படாமல் அப்படியே இருந்தன. மேலும், ரூபா 770,001 பெறுமதியான 02 மாதங்களுக்கு முன்னர் களஞ்சியங்களால் பெறப்பட்ட 504 சேலைகள் விநியோகிக்கப்படாமல் இருந்தன. | பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்தன. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அந்த சேலைகளை விரைவாக விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். தேவைப்பாடுகளை சரியாகக் கண்டறிந்து பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vi) | ரூபா 4.74 மில்லியன் செலவில் 09 வகையான ரோணர்களை கொள்வனவு செய்த போது கொள்வனவை மேற்கொண்ட பின்னர் உரிய பெறுகைக் குழு அறிக்கைகள் உள்ளடங்கலான ஆவணங்கள் போலியாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. | பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படைத்தன்மையை உறுதிய்யடுத்தி பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (vii) | ரூபா 1.99 மில்லியன் செலவில் கட்டிட மூலப்பொருட்களை கொள்வனவு செய்த போது. வழிகாட்டல் 2.14.1 இன் பிரகாரம் குறைந்தபட்ச | குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கேள்விகளை பெற்றுக்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களிற்கு | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கையிலான கேள்விகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. 10 நிறுவனங்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும் ஒரே ஒரு கேள்வி மாத்திரமே பெறப்பட்டுள்ளது. இதனால் மீண்டும் விலைமனுக்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டதுடன், அந்த சந்தர்ப்பத்தில், முன்னர் கேள்வி கோரப்பட்ட அதே 07 நிறுவனங்களிடமிருந்தே விலைமனுக்கள் கோரப்பட்டன. ஆகையால் இரண்டாவது நிகழ்விலும் ஒரு கேள்வியே பெறப்பட்டிருந்தது, எனவே, கொள்வனவு போட்டி இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அறிவுறுத்தப்பட்டுள்ளது. தவறுதலாக முதல் சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட அதே நிறுவனங்களிடம் இருந்து கேள்வி கோரப்பட்டது. | வேண்டும். அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் போட்டி கேள்விகளுடன் பெறுகை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (viii) | ரூபா 1.73 மில்லியன் தொகை செலவிட்டு கட்டிட மூலப்பொருட்களை கொள்வனவு செய்த போது பொருள்களின் பொருத்தமான வகையின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் கேள்விகளை கோருவதற்குத் தெரிவுசெய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் பெறுகை நடவடிக்கைகளிற்கு மீண்டும் புதிதாக கிரயங்களை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் மதிப்பிடப்பட்ட பெறுமதி 81 சதவீதால் மீறப்பட்டிருந்தது. | பாதுகாப்பு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட அலுமினிய உற்பத்தியாளர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்பட்டிருந்தன. சந்தை விலைகளில் உயர்வு காரணமாக மதிப்பீடு மீறப்பட்டது. | வழங்குநர்களிடம் போதுமான அளவு இருப்புக்கள் உள்ளதா என்பதும் குறிப்பிட்ட காலத்திற்குள் வழங்கலை மேற்கொள்ளும் திறன் உள்ளதா என்பதும் சரிபார்க்கப்பட வேண்டியது அவசியமாகும். மதிப்பீடுகள் முடிந்தவரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (ix) | ரூபா 1.33 மில்லியன் செலவில் Band சீருடை தொப்பிகள் மற்றும் Leather Gates ஐ கொள்வனவு செய்தமைக்காக விபரக்குறிப்புரைகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. வழிகாட்டி 7.7(ஈ) இற்கு முரணாக கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்காத அளவுகோலாக ”மாதிரி” ஐ கருத்தில் கொண்டு வழங்குநர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். | எதிர்கால பெறுகைகளிற்கான விரிவான விபரக்குறிப்புரைகளைத் தயாரிப்பதற்கும், மாதிரிகளை வழங்குவது தொடர்பான கேள்வி ஆவணங்களில் பந்தியொன்றை உள்ளடக்குவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (x) | ரூபா 1.14 மில்லியன் பெறுமதியான பீங்கான் பொருட்களின் கொள்வனவு தொடர்பாக கேள்வி கோரப்பட்டிருக்காத கேள்விதாரரால் கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கொள்வனவு செய்யும் போது கிரய மதிப்பீடு ரூபா 784,769 அல்லது 218 சதவீதத்தால் விஞ்சப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் திணைக்கள சின்னம் மற்றும் தங்கக் கோடு என்பன பதிக்கப்பட்டிருந்ததால் மதிப்பீடு மீறப்பட்டிருந்தது. | நிறுவனத்தால் கோரப்பட்ட கேள்விகள் மாத்திரமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும். மதிப்பீடுகள் முடிந்தவரை சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |
| (xi) | ரூபா 1.13 மில்லியன் செலவில் 200 ml பூச்சிக்கொல்லி கொள்கலன்களின் 567 அலகுகளை கொள்வனவு செய்த போது மதிப்பீடு 198 சதவீதத்தால் விஞ்சப்பட்டிருந்தது, அதே நேரம் பெறுகை வழிகாட்டல் 2.14.1 இற்கு முரணாக குறைந்தபட்ச எண்ணிக்கையிலான கேள்விகள் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், வழிகாட்டல் 6.3.3(அ) இற்கு முரணாக ஒரே ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே கேள்வி திறத்தலில் ஈடுபட்டிருந்தார். | இரண்டு நிறுவனங்கள் மாத்திரமே விலைமனுக்களை சமர்ப்பித்திருந்தன. முந்திரிகை பயிர்ச்செய்கைக்கு சரியான நேரத்தில் பூச்சிக்கொல்லிகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதால், இரண்டு விலைகளையும் கருத்தில் கொள்ள வேண்டியிருந்தது. காலக்கிரமத்தில் கேள்விகள் திறக்கப்படும் போது குழுவின் பங்கேற்பு இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.6 வாகனங்களை திருத்தம் செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் 9.3.1(ஆ) இலிருந்து விலகி, வரிசை அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரமின்றி திணைக்களத்தின் இரண்டு வாகனங்கள் ஒரு தனியார் வாகன திருத்துமிடத்திற்கு ரூபா 4.85 மில்லியன் செலவினத்திற்கு பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்டது. கேள்விதாரர்களுக்குத் தெரிவிக்காமல் குழுவின் இரண்டு உறுப்பினர்களின் பங்கேற்புடன் மாத்திரம் கேள்வி திறக்கப்பட்டிருந்தது. 14 நாட்களுக்குள் திருத்தம் செய்து பூர்த்தி செய்யப்படும் என்ற உடன்படிக்கையின் கீழ் வாகனங்கள் திருத்தப்பணிகளுக்காக அனுப்பப்பட்ட போதிலும் 03 வருடங்கள் | திருத்தப் பணிகள் 90 சதவீதம் பூர்த்தியடைந்திருந்தன. வாகன திருத்துமிடத்தில் இருந்து வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சின் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கு | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். திணைக்களத்தின் சொத்துக்கள் பாதுகாக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| கடந்த பின்னரும் திருத்தப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் வாகனங்களின் பாதுகாப்பும் பாதிக்கப்பட்டது. மேலும், வழிகாட்டல் 8.9.1 இன் பிரகாரம் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) பெறுகை வழிகாட்டல் 2.8.1(அ) இற்கு முரணாக திணைக்களத்தின் கெப் வண்டியொன்று ரூபா 40,180 செலவினத்தில் திருத்தம் செய்யப்பட்டிருந்த போது ஒரே உத்தியோகத்தர் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் தலைவராகப் பணியாற்றியிருந்தார். | எதிர்காலத்தில் பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

### 3.7 நிர்மாணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கதிர்காமத்தில் ஏனைய தரவரிசையாளர்களுக்கான விடுமுறை விடுதி கட்டிடத்தை தொழிலாளர் கிரயத்தை தவிர்த்து ரூபா 11.13 மில்லியன் செலவில் நிர்மாணிப்பதற்கு முன் உள்ளூராட்சி சபையின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கவில்லை. அங்கீகாரம் கிடைத்தவுடன், கட்டிடத் திட்டம் பல சந்தர்ப்பங்களில் திருத்தப்பட்டிருந்தது. இப்பிரிவுக்குள் இருந்தே ரூபா 2 மில்லியன் பெறுமதியான கட்டிட மூலப்பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக அதற்கு அரசாங்க நிதிகள் செலவிடப்பட்டிருந்தன. போட்டி கேள்வி செயன்முறையைப் பின்பற்றாமல் கட்டிட மூலப்பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், நிர்மாணங்கள் தொடர்பான அத்தியாவசிய ஆவணங்கள் நாளதுவரையாக்கப்பட்டு கோவையில் இடப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் எடை குறித்த வழிகாட்டல் மற்றும் அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளாதமை மற்றும் பழைய அடித்தளத்தின் ஒரு பகுதியை பொறியியலாளரின் ஆலோசனை அல்லது மேற்பார்வையின்றி பயன்படுத்தியதால் கட்டிடத்திற்கு வெளியே சாய்ந்திருந்த நிர்மாணங்களின் போது 4 அடி உயரத்தில் பல செங்கல் சுவர்களில் வெடிப்புக்கள் ஏற்பட்டிருந்தது. இதனால் அந்த சுவர்கள் அகற்றப்பட்டு, அதற்கான வலுவூட்டப்பட்ட தூண்களின் மீது மீண்டும் சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டு சமநிலை பீம்கள் கட்டப்பட்டன. அவ்வாறு இழந்த உழைப்பு மற்றும் மூலப்பொருட்களின் பெறுமதி | பின்னர் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. ஆரம்ப திட்டத்தில் சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. உள்ளூரில் கிடைத்த மூலப்பொருட்களை வழங்குவதற்கு உள்ளூராட்சி சபைகள் அவற்றின் இணக்கப்பாட்டை தெரிவித்திருக்கவில்லை. எதிர்காலத்தில் கட்டிடங்களை நிர்மாணிக்கும் போது பெறுகை வழிகாட்டல்களை பின்பற்றுவதற்கும், கோவைகள் மற்றும் ஆவணங்களை முறையாக பேணுவதற்கும், வழிமுறைகளை முறையாக பின்பற்றுவதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்தக் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் படையின் உழைப்பைக் | உள்ளூராட்சி அதிகாரசபையின் முன் அங்கீகாரத்துடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்பட வேண்டும். பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் தொடர்பாகவும் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். பெறுகை வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும். நிர்மாணப் பணிகள் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் வழிகாட்டலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். தொழில்நுட்ப பரிந்துரைகளின் அடிப்படையில் கட்டிட |

| | | |
|---|---|---|
| கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்தச் சூழ்நிலையால் நிர்மாணக் கிரயம் 100 சதவீதத்தால் அதிகரித்து, கட்டிட நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைவதற்கு நீண்ட காலம் எடுத்தது. பதப்படுத்தப்பட்டு உலர்த்தப்பட்ட பலகைகள் கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்காததாலும், திறமையற்ற ஊழியர் பயன்படுத்தப்பட்டதாலும், பல கதவுகள் மற்றும் ஜன்னல்களை சீராக மூடுவதில் சிரமத்துடன் சிதைவடைந்திருந்தன. கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மூடப்பட்ட பின்னர் இடைவெளிகள் அவதானிக்கப்பட்டன. பயன்படுத்தப்பட்ட மரத்தின் தரம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கை மூலம் சரிபார்ப்பு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. குளியலறைகள் மற்றும் பல இடங்களில் மாபிள்கள் சரியாகப் போடப்படாததால், தண்ணீர் கசிந்து கொண்டே இருந்தது. | கொண்டு உருவாக்கப்பட்டன, மேலும் அவர்களில் பலர் தொழில் பயிற்சி பெறாததால் குறித்த குறைபாடுகள் ஏற்பட்டுள்ளன. எனினும், குறைபாடுள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்கள் மற்றும் நீர் கசிவுகள் உள்ள இடங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு தொடர்பாக திருத்த நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | மூலப்பொருட்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தேவைப்பாட்டை சரியாகக் கண்டறியாமல் ரூபா 3.43 மில்லியன் செலவினத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ரயர்கள், ரியூப்கள், ரோணர்கள், சீருடைகள் மற்றும் மின்சாதனங்கள் மற்றும் பெறுமதி தெரியாத 34,873 அலகு ரயர் ரியூப்கள், ரோணர்கள், மின்சாதன பொருட்கள், சீருடைகள் மற்றும் துணிகள் ஆகியன நீண்டகாலமாக வழங்கப்படாததால் களஞ்சியங்களில் வழக்கற்றுப் போயிருந்தன. ரூபா 165,193 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட பதினேழு மின்சாதனப் பொருட்கள் உத்தரவாதக் காலப்பகுதியின் பாதிக்கும் மேற்பட்ட காலத்திற்குச் சமமான காலப்பகுதியில் விளைவற்றிருந்தன. 2018 அல்லது அதற்கு முன்னைய ஆண்டிலிருந்து 163,568 அலகு சீருடைகள், துணிகள் மற்றும் தொடர்புடைய மூலப்பொருட்கள் நகராமல் அல்லது மெதுவாக நகர்ந்து காணப்பட்டன. அவற்றில் 330,063 அலகு இருப்புக்களின் பெறுமதி கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்காத போதிலும் 13,505 அலகு இருப்புக்களின் பெறுமதி ரூபா 74.05 மில்லியன் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அதில் 311 | அந்த கொள்வனவுகள் அனைத்தும் 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஏன் அதிக கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டது என்பதும் இருப்புக்களில் இருந்து சேமிப்பு இருந்ததா என்பதும் தெளிவாக இல்லை. ரயர்கள், ரியூப்கள் மற்றும் ரோணர்கள் போன்ற பொருட்கள் குறித்து சபையின் அறிக்கைகள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன. சபைகளின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், மின்சாதனங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு | தேவைகள் மற்றும் சிக்கல்களை சரியாகக் கண்டறிந்து பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கறுப்பு காலுறைகள், 181 வெள்ளை காலுறைகள், 159 கறுப்பு கைக்குட்டைகள் நிறம் மாறி பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளன. | அனுப்புவதற்கும், தேவைக்கேற்ப மாத்திரமே கொள்வனவுகளை மேற்கொள்வதற்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | |
| (ஆ) | களஞ்சியங்களில் இருந்து அகற்றப்பட்ட அல்லது 2019 ஆம் ஆண்டிலிருந்தோ அல்லது அதற்கு முன்னரோ பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டு தற்போது செருபிட்டாவில் உள்ள முகாமில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள 151 வகைகளின் கீழான 1,228 நானாவித பொருட்கள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகள், கதிர்காமம், உஹன, மஹாஓயா, அம்பாறை மற்றும் மொனராகலை முகாம்களில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருந்த 58 அளவுகளிலான 676 ரயர்கள், 17 மோட்டார் வாகனங்கள், 05 முச்சக்கர வண்டிகள், 26 மோட்டார் சைக்கிள்கள், 05 துவிச்சக்கர வண்டிகள் மற்றும் 305 வகையான அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்களின் 2,554 உருப்படிகள் மீளாய்வாண்டிலும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த பொருட்கள் மற்றும் வாகனங்களின் பெறுமதிகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வின் பின்னர் அந்தப் பொருட்கள் அனைத்தையும் (வாகனங்கள் தவிர) அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாகனங்கள் தொடர்பாக சபையொன்று நியமிக்கப்பட்ட போதிலும் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக முன்னேற்றம் மெதுவாகவே இருந்தது. | தேவைப்பாடுகள் மற்றும் சிக்கல்களை சரியாகக் கண்டறிந்து பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அகற்றக்கூடிய நிலையில் உள்ள சொத்துக்களை விரைவாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பாதுகாப்பு அமைச்சின் 11 வாகனங்கள் மற்றும் 16 மோட்டார் சைக்கிள்கள், நிதி அமைச்சின் 02 வாகனங்கள், சனாதிபதி செயலகத்தின் 03 வாகனங்கள் மற்றும் பாராளுமன்ற அலுவலகம், பொது நிர்வாக அமைச்சு மற்றும் அபிவிருத்தி அமைச்சுக்கு ஆகியவற்றிற்கு சொந்தமான தலா ஒரு வாகனம் ஆகியவற்றை திணைக்களம் நீண்டகாலமாக பயன்படுத்துகிறது. எனினும் அந்த வாகனங்களின் உரிமைத்துவத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | அந்த வாகனங்களின் சட்டபூர்வ உரிமைத்துவம் தாமதமின்றி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 3.9 நட்டங்களும் சேதங்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 04 நட்டங்கள் மற்றும் சேதங்களின் பெறுமதி ரூபா 3.19 மில்லியன் தொகையை அறவீடு செய்வதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் சபைகளை நியமித்து, அது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | குறித்த நட்டங்கள் மற்றும் சேதங்களை அறவீடு செய்வதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மஹாஓயாவில் உள்ள மாகாண அலுவலகத்தில் செங்கல் உற்பத்தி செயற்திட்டத்தின் கீழ் 782,326 செங்கற்கள் தட்டுப்பாட்டினால் ஏற்பட்ட நட்டத்தை பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுமாறு 2018 யூலை 03 இல் விசாரணைச் சபையினால் பரிந்துரைக்கப்பட்டிருந்தது. எனினும் நட்டத்தை அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.10 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மின்சார வேலியை பராமரிப்பதற்காக 3,300 பணியாளர்கள், காட்டு யானைகளை விரட்டுவதற்கு 845 பணியாளர்கள், வனவிலங்கு அலுவலகங்களில் 389 பணியாளர்கள் உட்பட 4,534 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, இதுவரை அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலிகளின் மொத்த நீளம் 4,756 கிலோமீற்றராகும், மேலும் 99 சதவீதத்திற்கு சமமான 4,725 கிலோமீற்றர் நீளம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் பராமரிக்கப்படுகிறது. தொடர்புடைய இரண்டு திணைக்களங்களும் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன, சேவைகள் எவ்வாறு பரஸ்பரம் வழங்கப்படுகின்றன மற்றும் நிதி | எமது திணைக்களத்திற்கும் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கும் இடையில் மின்சார வேலியை பராமரிப்பது தொடர்பில் ஒருங்கிணைப்பு தொடர்பான உடன்படிக்கை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இரண்டு தடவைகள் நினைவூட்டப்பட்ட போதிலும் பிந்தையவரால் திகதி இன்னும் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை. பணியாளர்களுக்கு | மனித - யானை மோதலில் ஈடுபட்டுள்ள ஒட்டுமொத்த பணியாளர்களையும், அரசாங்கத்தின் மொத்த செலவினங்களையும் கருத்தில் கொண்டு, மனித - யானை மோதலால் ஏற்படும் உயிர் மற்றும் உடைமை இழப்புகளை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு செய்யும் முறை என்பன குறித்து பொதுவான உடன்பாடு எட்டப்பட்டிருக்கவில்லை. காட்டு யானைகளை விரட்டுவதற்கு சம்பளம் மற்றும் படிகள் தொடர்பாக ரூபா 427 மில்லியன் வருடாந்த கிரயம் செலவிடப்பட்டு 845 பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் அந்த பணியாளர்கள் அது தொடர்பாக சரியான பயிற்சியை பெற்றிருக்கவில்லை. மேலும், காட்டு யானைகளை துரத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு பணியாளர்களை கண்காணிப்பதற்கு சிவில் பாதுகாப்பு திணைக்களம் அல்லது வனஜீவராசிகள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. அவர்களுக்கு போதிய உபகரணங்கள், ஆயுதங்கள், பட்டாசுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2010 முதல் 2020 வரையான காலப்பகுதியில் இலங்கையில் மின்சார வேலிகள் அமைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 1.64 பில்லியன் கூட்டுமொத்தமாக உள்ள அதேநேரம் 2016-2020 காலப்பகுதியில் மின்சார வேலிகளை பராமரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளங்கள் உள்ளடங்கலாக ரூபா 1.16 பில்லியன் கூட்டுமொத்தமாகும். குறித்த காலப்பகுதியில் மனித - யானை மோதலினால் 989 பேரும் 3,646 யானைகளும் உயிரிழந்துள்ளன. முன்னைய ஆண்டுகளிற்கு எதிராக சமீபத்திய ஆண்டுகளில் மனித உயிர் இழப்புகள் அதிகரித்துள்ளன, ஆனால் சிவில் பாதுகாப்பு பணியாளர்களால் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முடியவில்லை. | முறையான பயிற்சி அளிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளோம். காட்டு யானைகளை விரட்டுவதற்கு வனவிலங்கு அதிகாரிகளுக்கு மாத்திரமே எமது பணியாளர்கள் உதவுகிறார்கள், தற்போது மனித-யானை மோதலால் ஏற்படும் இறப்புகள் குறைந்துள்ளதாக வனவிலங்கு தரவுகளின் பிரகாரம் தெரிகிறது. | |
| (ஆ) | 34,286 சதுர அடி பரப்பளவைக் கொண்ட 42 கட்டிடங்களுடன் ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான 51 றூட்கள் கொண்ட 12 காணித்துண்டுகள் நீண்டகாலமாக திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டு வந்தன. அந்த சொத்துகளுக்கான சட்டபூர்வ உரிமைகளை கையகப்படுத்துவதற்கு கணிசமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஏனைய நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பான பதிவேடுகளை பரீட்சித்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய நிறுவனங்களுக்கு சொந்தமான கட்டிடங்களை பராமரிப்பதற்கு செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதால் அந்த சொத்துகளுக்கான சட்டபூர்வ உரிமைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | பெறப்பட வேண்டும். |
| (இ) | அலுவலகங்கள், உத்தியோகபூர்வ விடுதிகள், தங்குமிடங்கள் மற்றும் களஞ்சியங்களை பராமரிப்பதற்கான கட்டிடங்களின் தேவைப்பாடு தொடர்பான நீண்டகாலத் திட்டத்தை திணைக்களம் கடைப்பிடிக்கத் தவறியதால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்குச் சொந்தமான 130,769 சதுர அடி மற்றும் 2,000 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்ட 128 கட்டிடங்கள் தற்காலிகமாக பயன்படுத்தப்பட்டிருந்தன. சில கட்டிட வளாகங்கள் திணைக்களத்தின் செலவினத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. | அந்த கட்டிடங்களின் தேவைப்பாடு குறித்து மீளாய்வு செய்து மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டிடங்களின் தேவைப்பாடு கண்டறியப்பட்டு நீண்ட கால திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்கள உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு excise புத்தகங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்காக சேவா வனிதா சங்கம் கந்தளாய் மாகாண அலுவலகத்திலிருந்து 239 பணியாளர்களை ஈடுபடுத்தியது. மொத்த சம்பளம் தொடர்பாக ரூபா 45.1 மில்லியன் கூட்டுமொத்த கிரயம் செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தத் தொகை திணைக்களத்திற்கு மீள்நிரப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | excise புத்தகங்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக திறந்த சந்தையில் இருந்து தொடர்ந்துவரும் ஆண்டுகளில் கொள்வனவு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கவனம் செலுத்துவதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | சம்பளம் தொடர்பான குறித்த கிரயத்தை மீள்நிரப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு மற்றும் ஏனைய சேவைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 18.31 மில்லியன் தொகையை அறவிட்டிருக்கவில்லை. அதில் ரூபா 6.38 மில்லியன் தொகை முன்னைய ஆண்டில் பெறவேண்டியிருந்ததுடன் பல ஆண்டுகளிற்கு முன்னர் வழங்கப்பட்ட சேவைகளிற்காக பெறவேண்டிய மீதிகள் காணப்பட்டன. | ஏற்கனவே கணிசமான வருமானம் திணைக்களத்தால் அறவிடப்பட்டுள்ளது. மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 41 காணித்துண்டுகளில் 72.05 ஹெக்டெயர் நிலப்பரப்பு, 134,955 சதுர அடியுடன் கூடிய 118 கட்டிடங்கள், 12 பயணிகள் வாகனங்கள், 203 விவசாய வாகனங்கள், 19 தொழில்நுட்ப வாகனங்கள், 205 மோட்டார் சைக்கிள்கள் ஆகியவை மதிப்பீடு செய்யப்பட்டு நிலையான சொத்துக்கள் | அவ்வாறு செய்யக்கூடிய சொத்துக்களை மதிப்பீடு செய்து கையகப்படுத்துவதற்கும், 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் மதிப்பீட்டு பெறுமதிகளை காட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய சொத்துக்கள் பதிவு செய்யப்பட்டு கணக்கிற்கு கொண்டு வர வேண்டும். |

பதிவேட்டில் காட்டப்பட்டிருக்கவில்லை. இதனால் மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லாத சொத்துகள் பற்றிய கூற்றிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

## 4. மனித வளங்கள் முகாமத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திணைக்களத்தின் சிவில் பதவியணியினரில் 40 வெற்றிடங்கள் உள்ளன, இதில் சிரேஷ்ட மட்டத்தில் ஒரு வெற்றிடமும், மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைகளில் 13 வெற்றிடங்களும் ஏனைய தரவரிசையாளர்கள் மற்றும் பணியாளர்களில் 5,296 வெற்றிடங்களும் உள்ளன. அந்த வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உண்மையான பதவியணியினரிற்கு ஏற்ப திருத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 34,866 பதவியணியினரில் 86 உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு மாத்திரமே மீளாய்வாண்டில் ஏதாவது ஒரு வகையான பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்துபூர்வமாக பல தடவைகள் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் இதுவரை அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. முப்படையில் இருந்தும் தகுந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொண்டு திணைக்களத்தால் சிரமங்களை முகாமைசெய்ய முடிந்தது. திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகத்திட்டங்களை தொற்றுநோய் காரணமாக நடாத்த முடியவில்லை. | வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை உண்மையான பதவியணியினரிற்கு ஏற்ப திருத்தவோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஊழியர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் திணைக்களத்தின் செயலாற்றல் மேம்படுத்தப்பட வேண்டும். |